# <u>செய்தி வெளியீடு – 11.4.2008</u>

## <u>சென்னை–பெங்களூரு தொழில்வள நெடுஞ்சாலைத் திட்டம்</u>

## <u>முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கோரிக்கை</u>
## <u>பிரதமர் மன்மோகன் சிங் ஏற்பு</u>

தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பிரதமர் திரு. மன்மோகன் சிங் அவர்களுக்கு 26.10.2007 அன்று எழுதிய நேர்முகக் கடிதத்தில், புதுடெல்லியிலிருந்து மும்பை வரை செல்லும் நெடுஞ்சாலையைத் தொழில்வள நெடுஞ்சாலையாக (Industrial Corridor) உருவாக்கிட மத்திய அரசு அறிவித்துள்ளது போல, சென்னை–பெங்களூரு இடையிலான நெடுஞ்சாலையையும் தொழில்வள நெடுஞ்சாலையாக மேம்படுத்துவதற்குரிய சிறந்த வாய்ப்புகள் உள்ளன என்று கூறி, சென்னை – பெங்களூரு நெடுஞ்சாலையைத் தொழில்வள நெடுஞ்சாலையாக அறிவித்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

சென்னை–பெங்களூரு நெடுஞ்சாலையைத் தொழில்வள நெடுஞ்சாலையாக அறிவிப்பதன்மூலம் இந்த நெடுஞ்சாலை முழுவதிலும் உலகத் தரத்திற்கு இணையான உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக வழிவகுக்கும் என்றும், அத்துடன், இந்த நெடுஞ்சாலை அமைந்துள்ள ராணிபேட்டை, வேலூர், கிருஷ்ணகிரி, ஓசூர் ஆகிய பகுதிகளில் ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சி தொடர்ந்து நிலைபெறவும், மேலும் மேம்படவும் உதவும் என்றும் தமிழக அரசு கருதுகிறது.

இந்த அடிப்படையில், முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று, பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் தமிழக அரசுக்கு 1.4.2008 அன்று எழுதியுள்ள கடிதத்தில், சென்னை–பெங்களூரு நெடுஞ்சாலையை ஒரு தொழில்வள நெடுஞ்சாலையாக மேம்படுத்துவதற்கு உரிய வாய்ப்புகள் உள்ளதாகவும், இத்திட்டம் மும்பை வரை நீட்டிக்கப்படுமாயின் மேலும் பயன்தரும் என்றும் தெரிவித்துள்ளார். அத்துடன், சென்னை–பெங்களூரு–மும்பை தொழில்வள நெடுஞ்சாலைத் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்து தொடர்புடைய மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்து மத்திய அரசு ஒரு கொள்கை அறிக்கையினைத் தயாரிக்கும் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

***